புதுவை அரசு
வருவாய் துறை
***

பாண்டிச்சேரி, 17 APR 1974

## சுற்றறிக்கை

புதுவை அரசு 1970-ம் வருடத்திய 14-வது தீர்வை வசூல் சட்டத்தின் கீழ் கிராம கர்ணம், தலையாரி இவர்கள் தங்கள் கடமைகளை, இதில்காணும் நடைமுறை விதிகளை சரிவர பின்பற்றி பணியாற்ற வேண்டும் என்று பணிக்கப்படுகிறார்கள்.

## கடமைகள்

தீர்வை வசூல் செய்வதும் அதை நேரே சர்க்கார் கஜானாவிலோ அல்லது மாநில வங்கியிலோ செலுத்துவதும், அப்படி செலுத்தும்வரை தம் வசத்திலேயே வைத்திருப்பதும் கிராம கர்ணத்தின் மிகவும் முக்கியமான கடமையென்பதைக் கவனத்தில் வைக்கவேண்டும்.

கூடியவரையில், கிராமத்தில் ஏற்பட்டிருக்கும் கர்ணம் அலுவலகத்திலேயே, தீர்வைப்பணத்தை வரப்பெற்றுக்கொள்ளவேண்டும். செலுத்தப்படும் தொகைக்கு உடனடியாக அச்சு ரசீதுகளில் கர்ணம் முழுக்கையொப்பம் இட்டு பணம் செலுத்துபவரின் கையொப்பம் (மூன்று பிரதிகளிலும் கார்பனை நீக்காமல்) வாங்கிக்கொண்டு அசலை அவரிடம் சேர்ப்பித்து விடவேண்டும். இரண்டாவது பிரதியை, கஜானாவுக்கு பணம் செலுத்த அனுப்பிவைக்கும்போது கிழித்து ஒன்றாக நூல் போட்டு சேர்த்து சலானுடன் அனுப்பவேண்டும். மூன்றாம் பிரதி கர்ணத்திடமே, தேவைப்படும்போது தணிக்கைசெய்ய வசதியாக பத்திரப்படுத்திவைக்க வேண்டியது. ரசீதுகளில் அடித்தல் திருத்தல் இருக்கக்கூடாது.

அன்றாட வசூல் தொகையைக் குறிக்கும் 13-ம் நெம்பர் (தண்டல்) கணக்கை, உடனுக்குடன் ரசீதுகள் கிழித்துக் கொடுக்கப்பட்டவுடன் பதியவேண்டும். அப்படி பதியும்போது அதற்கடியில் வெள்ளைத்தாள் வைத்து கார்பன் நகலும் ஒரே காலத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த கார்பன் நகலை, பணம் கஜானாவுக்கு செலுத்தும்போது இரண்டாம் பிரதி ரசீது சலானுடன் சேர்த்து அனுப்பி வைக்கவேண்டும். இந்தக் கணக்கில், தொகை எண்களிலோ, எழுத்துக்களிலோ அடித்தல் திருத்தல் இருக்கக்கூடாது. தவறி ஏற்பட்டால் கர்ணம் சுருக்கொப்பம் செய்யவேண்டும்.

வசூலான பணத்தை ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல் முதலிய நான்கு கிஸ்து மாதங்களில் வாரம் ஒரு முறையும், மற்ற மாதங்களில், மாதம் இருமுறையோ அல்லது கையிருப்புத்தொகை ரூபாய் ஆயிரத்துக்கு கூடுதலாகச் சேர்ந்து விட்டாலோ கஜானாவுக்கு முறைப்படி அந்தந்த தாலூகா தாசில்தார்/டிப்டி தாசில்தார் அறிக்கையில் குறிப்பிட்ட தேதிகளில் தவறாமல் செலுத்திவிடவேண்டும். கிஸ்து மாதங்களில் குறிப்பிட்ட தேதியில் வசூலான பணத்தை கஜானாவில் செலுத்தத் தவறக்கூடாது. தவறினால் சரியான முகாந்திரம் காட்டப்படாமல் தொடர்ந்து பணத்தை கஜானாவில் செலுத்தாமல் இருந்ததற்கு கர்ணம் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கிராமத்தில் முகாம் செய்யும்போது, இந்த முறை கடைப்பிடிக்கப்படுகிறதா என்று கவனித்து, கர்ணம் சமாதானத்தையும் உடன் வாங்கி, தன் அறிக்கையுடன் சேர்த்து தாசில்தார்/டிப்டி தாசில்தாருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கவேண்டும். முத்திரையிடப்பட்ட அச்சு ரசீது தவிர வேறு கைரசீது கொடுக்கக்கூடாது. பட்டாதாரர்களிடமிருந்து அசல் ரசீதுகளை வாங்கி, கர்ணத்தின் ரசீது மூன்றாம் பிரதியுடன் ஒப்பிட்டு கண்காணிக்க வேண்டும். தணிக்கை செய்த விவரம் ரெவன்யூ இன்ஸ்பெக்டர் நாட்குறிப்பிலும் எழுதவேண்டும்.

கர்ணம் முறைப்படி குறிப்பிட்ட தேதிகளில் வசூலான பணத்தை கஜானாவுக்கு செலுத்த அனுப்பும்போது சலானுடன் ஏற்கனவே கூறியபடி 13-ம் நெம்பர் அன்றாட

கணக்கு பிரதியும், ரசீதுகளின் இரண்டாம் பிரதியும் சேர்த்து அனுப்பவேண்டும். பணம் எடுத்துப்போகும் தலையாரிடமோ அல்லது கர்ணமோ, சலானுடன் இந்த ரசீதுகளையும் 13-ம் நெம்பர் தண்டல் கணக்கு பிரதி கோர்வையை, தாலூகா/சப்-தாலூகா அலுவலகத்தில் இந்த அலுவலை கவனிக்கும் அலுவரிடம் முதலில் கொடுக்கவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும், வசூல் தொகையை அந்த அலுவலரிடமோ வேறு எந்த அலுவலரிடமோ கொடுக்கக்கூடாது. எந்த அலுவலரும், தாசில்தார்/டிப்டி தாசில்தார் உத்தரவு இல்லாமல் பணத்தை பெற்றுக்கொள்ளக்கூடாது. அலுவலர் கூட்டுத்தொகை, ரசீதுகள் முதலியன ஒப்பிட்டு சரிபார்த்து சலானில் மேலொப்பம் பெற்று தலையாரியிடம் சலானை மட்டும் ஒப்படைக்கவேணும். சலானைப் பெற்றதும், தொகையை கஜானாவில் செலுத்தி ரசீது பெற்று செல்லவேண்டும். தாலூகா அலுவலகத்தில், இரண்டாம் பிரதி ரசீதுகளையும் தண்டல் பிரதிகளையும் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் இவைகளை கர்ணங்களிடம் திருப்பி அனுப்பவோ அல்லது அவைகளை கையாளவோ அனுமதிக்கக்கூடாது. கருவூலகத்தில்தான் தொகைகள் செலுத்தப்படவேண்டும். தொகைகளை வசூல் செய்வதிலும், அவைகளைக் கணக்குகளில் சரிவர வரவு வைப்பதிலும், கஜானாவுக்கு அனுப்புவதிலும் தாமதம் கவனக்குறைவுகளும், கிராம பிசகுகளும் நேரிடாதபடி கர்ணம் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். கஜானாவுக்கு, பணம் செலுத்த கர்ணம் போக வேண்டுமென்கிற அவசியமில்லை. ஒவ்வொரு கிஸ்தியிலும், வசூல் பூர்த்தியாய்ச் செய்யப்பட்டு, நியமிக்கப்பட்ட தேதிகளில், நம்பிக்கையுள்ள போதுமான காவல் சகிதமாக முத்திரை போடப்பட்ட பைகளில் பணம் அனுப்பிவைக்கவேண்டியது. அவருடைய கடமையாகும். தாலூகா கஜானா/மாநில வங்கிக்கு பணம் செலுத்த தொகைகளை கொண்டு போவது தலையாரியினுடைய முக்கிய கடமையாகும். ஆனால், அவ்வாறு அனுப்பப்படும் வசூல் பணம் அங்கே பெற்றுக்கொள்ளப்படுகிறவரையில் அதற்குக் கிராம கர்ணம் உத்தரவாதியாயிருப்பதாக கருதப்படும். மேலும், செலுத்தப் பட்ட தொகையை சரிபார்த்து-சோதித்து பார்க்கையிலே குறைவிருப்பதாகக் காணப் படுமாகில் அவர் அதற்காகவும் உத்திரவாதியாவார்.

## வரிவசூல் -- எளியமுறை

ஒவ்வொரு பட்டதாரரும் தம்முடைய நிலத்துக்காகப் பாக்கியாகும் தீர்வையை, அது செலுத்தப்பட வேண்டிய கிஸ்து மாதத்தின் 10-ந் தேதியிலாவது அதற்கு முன்னிட்டாவது கர்ணத்திடம் செலுத்திவிடவேண்டும். கிஸ்து முழுமையுமாவது அதன் ஒரு பாகமாவது அந்தப்படி 10-ந் தேதியில் முடிந்து செலுத்தப்படா திருக்கிறபோது, அந்த கிஸ்தி தொகையாகிலும் அதில் செலுத்தப்படாத பாகமாகிலும் தீர்வை பாக்கியாக கருதப்படும்.

ரெவின்யு கணக்குகளில் பதிவான கைப்பற்றுதாரர்களாவது (பட்டிதார்) அவர்களுடைய உறவினர்கள் சிநேகிதர்களாவது கைப்பற்று நிலத்தில் பற்றுள்ள வேறு நபர்களாவது நிலவரி தொகைகளை செலுத்தலாம். ஆனால், கிஸ்தி செலுத்துவதற்கு அரசு கணக்குகளில் பதிவான பட்டாதாரர்களையே எதிர்பார்க்கிறார்கள். பட்டாதாரர்கள், தாம் கிஸ்து செலுத்துவதாக முன்வரும்போது, மற்றவர்களால் செலுத்தப்படும் தொகைகளை அதே பட்டாவுக்காக பெற்றுக்கொள்ளக்கூடாது.

கிஸ்தி தொகைகள் பாக்கியாகும்போது கால தாமதமில்லாமல் அவைகளை வசூல் செய்யவேண்டும். பட்டாதாரர்கள், முன்னதாகவே நான்கு கிஸ்து தொகைகளையும் செலுத்துவதாக முன்வருவார்களேயானால் அவ்வாறு முன்னதாக வசூல் செய்வதற்கு ஆட்சேபனை இல்லை.

தொகை உண்மையில் செலுத்தப்படுவதற்கு முன்பு எவ்வகையான ரசீதுகளையும் கொடுக்கக்கூடாது. ரெஜிஸ்தரான பட்டாதாரர் பணம் செலுத்துவார் என்று எதிர் பார்த்து ரசீது கொடுக்கப்பட்டதென்கிற சமாதானம் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

பட்டாவுக்குள்ள டிமாண்டுக்கு அதிகப்படியாக செலுத்தப்பட்ட தொகைகளை குறித்து விவரம் காட்டும் 14-சி கணக்கு பசலி முடிவில் தயாரிக்கவேண்டும். மேற்கண்ட தொகைகள் நடைமுதல் வருடத்தில் தை பட்டாக்களுக்கு சேர வேண்டிய தீர்வைக்காக சரிக்கட்டப்படும். அவ்வாறு சரிக்கட்ட முடியாதபடி அதிகப்படியாய்த்

தொகைகள் செலுத்தியிருக்கிற நபர்கள் அவைகளை ரீபண்டு செய்யும்படியாக தாசில்தார்/டிப்டி தாசில்தாருக்கு விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும்.

மேற்கண்ட 14-சி கணக்கு தயார் செய்யப்பட்டு தாசில்தார்/டிப்டி தாசில்தார் ஒப்புதல் செய்யப்பட்டு டிப்டி கலெக்டர்/சப் கலெக்டர் அவர்களால் மேல் தணிக்கை செய்யப்பட்டவுடன் கிராமத்தில் கர்ணம் அலுவலகத்தி பட்டாதாரர்கள் பார்வைக்கு வைப்பதுடன், தண்டோரா மூலம் பிரசித்தம் செய்யவும் வேண்டும். ரீபண்டு மனுக்களை தாசில்தார்/டிப்டி தாசில்தார் துரிதமாக பைசல் செய்யவேண்டும். 14-சி கணக்கின்படி யாதொரு பட்டாவுக்காக அதிகப்படியாக செலுத்தி, வாபஸ் செய்யப்படாத தொகைகளை, அடுத்த பசலிக்கு, அந்தப்பட்டா அன்னார் பெயரிலேயே இன்னும் இருந்து கொண் வருகிற விஷயங்களிலெல்லாம் அதே பட்டாவுக்கு முன்னதாகச் செலுத்தப்பட்ட தொகைகளாகப் பாவித்து சரிக்கட்டவேண்டும்.

முந்திய வருஷத்து டிமாண்டை அனுசரித்தும் 14-சி கணக்குபடி சரிகட்டவேண்டிய தொகையை கணக்கில் சரிகட்டியும், பிற்பாடு மாறுதல்கள் எவையேனும் செய்யப்பட்டு இருந்தால் அவைகளை அனுசரித்தும், அந்தந்த பட்டாவில் பதியப்பட்டு இருக்கும் தீர்வையின்பேரில் செஸ், சர்சார்ஜ் தொகைகளை அனுசரித்து கிஸ்து மாதங்களில் செலுத்தப்படவேண்டிய தவணை தொகைகளை நான்கு சம தவணைகளாக கணக்கிடவேண்டும். ஒவ்வொருவதவணையும் கிஸ்தி என்றே குறிப்பிட படும். ஆனால், 5 ரூபாய்க்கு குறைந்த நிலவரியுள்ள பட்டாதாரிகளிடம் இருந் ஒரே தவணையாக வசூல் செய்யவேண்டும். இதற்குமேற்பட்ட நிலவரியுள்ள பட்டாக்களின் தொகையை, நான்கு சம தவணைகளாக ஜனவரி முதல் ஏப்ரல் வரை பிரதிமாதம் 1 தவணை வீதம் வசூல் செய்யவேண்டும். ஒரு நயாபைசாவுக்கும் குறைவாக பின்னமாக தவணைத்தொகைகளை கடைசி கிஸ்திகளில், முழு பைசாவாக் கணக்கிட்டு வசூல் செய்யவேணும்.

உதாரணமாக பட்டாப்படி டிமாண்டு ரூ 36-10 நபை என்றுள்ளதை ஒவ்வொரு கிஸ்தி டிமாண்டும் 36-10 -- 9-2 1/2 என்று கணக்கிடுவதற்கு பதிலாக முதல் மூன்று கிஸ்தி தவணைகளையும் 9.04 என்று கணக்கிட்டும் கடைசி கிஸ்து 9.04ம் வசூலிக்கவேண்டும்.

டிமாண்டு ரோல் ஒப்புதல் செய்யப்படுவதற்கு முன்பு கிஸ்தியை கணக்கிடும்போது கிராம கர்ணம் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சரியான டிமாண்டுக்கு அதிகமாக எதையும் வசூல் செய்யாமலிருப்பது சாத்தியமாயிருக்கவேண்டும்.

## வரிவசூல் -- பலவந்த முறை

1070 வருஷத்தில் 14-வது சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் சம்மன் முதலிய கட்டளைகளை இலவசமாய்ச் சேர்ப்பிப்பதும், அந்த சட்டத்தில் கண்டபடி மறியல் செய்வதும், ஜப்தி பண்ணுவதும் கிராம கர்ணத்தின் சரியான அலுவலைச் சேர்ந்தவைகளாகும். ஆகையால் அவர்கள் தங்களுடைய அலுவல்களைச் சரியாய்ச் செய்யும் பொருட்டு ஷை சட்டத்தில் நிபந்தனைகளின் அடியிற்க சங்கிரகத்தையும் அதன்படி இலாகா மூலமாய் பிறப்பிக்கப்பட்ட அறிக்கைகளையும் நன்றாய் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

நிலத்துக்காகச் செலுத்தவேண்டிய அரசு தீர்வையிலே தண்ணீர் பாய்ச்சிய காக விதிக்கப்பட்ட தண்ணீர் தீர்வையும், சர்க்கார் புறம்போக்கு ஆக்ரமணம், தருசு நிலங்களின் பேரில் விதிக்கப்பட்ட தீர்வை, தண்டவரி, வேறே தீர்வைக்கும் அடங்கும்.

ஜப்தி செய்தும், விற்பனை பண்ணியும், பாக்கியை வசூல் செய்யத் தாசில்தார்களுக்கும்/டிப்டி தாசில்தார்களுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கி

தொகைகள் செலுத்தியிருக்கிற நபர்கள் அவைகளை ரீபண்டு செய்யும்படியாக தாசில்தார்/டிப்டி தாசில்தாருக்கு விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும்.

மேற்கண்ட 14-சி கணக்கு தயார் செய்யப்பட்டு தாசில்தார்/டிப்டி தாசில்தார் ஒப்புதல் செய்யப்பட்டு டிப்டி கலெக்டர்/சப் கலெக்டர் அவர்களால் மேல் தணிக்கை செய்யப்பட்டவுடன் கிராமத்தில் கர்ணம் அலுவலகத்தி பட்டாதாரர்கள் பார்வைக்கு வைப்பதுடன், தண்டோரா மூலம் பிரசித்தம் செய்யவும் வேண்டும். ரீபண்டு மனுக்களை தாசில்தார்/டிப்டி தாசில்தார் நேரிடையாக பைசல் செய்யவேண்டும். 14-சி கணக்கின்படி யாதொரு பட்டாவுக்காக அதிகப்படியாக செலுத்தி, வாபஸ் செய்யப்படாத தொகைகளை, அடுத்த பசலிக்கு, அந்தப்பட்டா அன்னார் பெயரிலேயே இன்னும் இருந்து கொண் வருகிற விஷயங்களிலெல்லாம் அதே பட்டாவுக்கு முன்னதாகச் செலுத்தப்பட்ட தொகைகளாகப் பாவித்து சரிக்கட்டவேண்டும்.

முந்திய வருஷத்து டிமாண்டை அனுசரித்தும் 14-சி கணக்குபடி சரிகட்டவேண்டிய தொகையை கணக்கில் சரிகட்டியும், பிற்பாடு மாறுதல்கள் எவையேனும் செய்யப்பட்டு இருந்தால் அவைகளை அனுசரித்தும், அந்தந்த பட்டாவில் பதியப்பட்டு இருக்கும் தீர்வையின்பேரில் செஸ், சர்சார்ஜ் தொகைகளை அனுசரித்து கிஸ்து மாதங்களில் செலுத்தப்படவேண்டிய தவணை தொகைகளை நான்கு சம தவணைகளாக கணக்கிடவேண்டும். ஒவ்வொருதவணையும் கிஸ்தி என்றே குறிப்பிட படும். ஆனால், 5 ரூபாய்க்கு குறைந்த நிலவரியுள்ள பட்டாதாரிகளிடம் இருந்து ஒரே தவணையாக வசூல் செய்யவேண்டும். இதற்குமேற்பட்ட நிலவரியுள்ள பட்டாக்களின் தொகையை, நான்கு சம தவணைகளாக ஜனவரி முதல் ஏப்ரல் வரை பிரதிமாதம் 1 தவணை வீதம் வசூல் செய்யவேண்டும். ஒரு நயாபைசாவுக்கும் குறைவாக பின்னமாக தவணைத்தொகைகளை கடைசி கிஸ்திகளில், முழு பைசாவாக்கி கணக்கிட்டு வசூல் செய்யவேணும்.

உதாரணமாக பட்டாப்படி டிமாண்டு ரூ 36-10 நப என்றுள்ளதை ஒவ்வொரு கிஸ்தி டிமாண்டும் 36-10 -- 9-2 1/2 என்று கணக்கிடுவதற்கு பதிலாக முதல் மூன்று கிஸ்தி தவணைகளையும் 9.04 என்று கணக்கிட்டும் கடைசி கிஸ்து 9.04ம் வசூலிக்கவேண்டும்.

டிமாண்டு ரோல் ஒப்புதல் செய்யப்படுவதற்கு முன்பு கிஸ்தியை கணக்கிடும்போது கிராம கர்ணம் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சரியான டிமாண்டுக்கு அதிகமாக எதையும் வசூல் செய்யாமலிருப்பது சாத்தியமாயிருக்கவேண்டும்.

## வரிவசூல் - பலவந்த முறை

1070 வருஷத்தில் 14-வது சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் சம்மன் முதலிய கட்டளைகளை இலவசமாய்ச் சேர்ப்பிப்பதும், அந்த சட்டத்தில் கண்டபடி மறியல் செய்வதும், ஜப்தி பண்ணுவதும் கிராம கர்ணத்தின் சரியான அலுவலைச் சேர்ந்தவைகளாகும். ஆகையால் அவர்கள் தங்களுடைய அலுவல்களைச் சரியாய்ச் செய்யும் பொருட்டு ஷை சட்டத்தில் நிபந்தனைகளின் அடியிற்கா சங்கிரகத்தையும் அதன்படி இலாகா மூலமாய் பிறப்பிக்கப்பட்ட அறிக்கைகளையும் நன்றாய் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

நிலத்துக்காகச் செலுத்தவேண்டிய அரசு தீர்வையிலே தண்ணீர் பாய்ச்சியத காக விதிக்கப்பட்ட தண்ணீர் தீர்வையும், சர்க்கார் புறம்போக்கு ஆக்ரமணம், தருசு நிலங்களின் பேரில் விதிக்கப்பட்ட தீர்வை, தண்டவரி, வேறே தீர்வைகளும் அடங்கும்.

ஜப்தி செய்தும், விற்பனை பண்ணியும், பாக்கியை வசூல் செய்யத் தாசில்தார்களுக்கும்/டிப்டி தாசில்தார்களுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற

தொகைகள் செலுத்தியிருக்கிற நபர்கள் அவைகளை ரீபண்டு செய்யும்படியாக தாசில்தார்/டிப்டி தாசில்தாருக்கு விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும்.

மேற்கண்ட 14-சி கணக்கு தயார் செய்யப்பட்டு தாசில்தார்/டிப்டி தாசில்தார் ஒப்புதல் செய்யப்பட்டு டிப்டி கலெக்டர்/சப் கலெக்டர் அவர்களால் மேல் தனிக்கை செய்யப்பட்டவுடன் கிராமத்தில் கர்ணம் அலுவலகத்தி பட்டாதாரர்கள் பார்வைக்கு வைப்பதுடன், தண்டோரா மூலம் பிரசித்தம் செய்யவும் வேண்டும். ரீபண்டு மனுக்களை தாசில்தார்/டிப்டி தாசில்தார் துரிதமாக பைசல் செய்யவேண்டும். 14-சி கணக்கின்படி யாதொரு பட்டாவுக்காக அதிகப்படியாக செலுத்தி, வாபஸ் செய்யப்படாத தொகைகளை, அடுத்த பசலிக்கு, அந்தப்பட்டா அன்னார் பெயரிலேயே இன்னும் இருந்து கொண்டே வருகிற விஷயங்களிலெல்லாம் அதே பட்டாவுக்கு முன்னதாகச் செலுத்தப்பட்ட தொகைகளாகப் பாவித்து சரிக்கட்டவேண்டும்.

முந்திய வருஷத்து டிமாண்டை அனுசரித்தும் 14-சி கணக்குபடி சரிகட்டவேண்டிய தொகையை கணக்கில் சரிகட்டியும், பிற்பாடு மாறுதல்கள் எவையேனும் செய்யப்பட்டு இருந்தால் அவைகளை அனுசரித்தும், அந்தந்த பட்டாவில் பதியப்பட்டு இருக்கும் தீர்வையின்பேரில் செஸ், சர்சார்ஜ் தொகைகளை அனுசரித்து கிஸ்து மாதங்களில் செலுத்தப்படவேண்டிய தவணை தொகைகளை நான்கு சம தவணைகளாக கணக்கிடவேண்டும். ஒவ்வொருதவணையும் கிஸ்தி என்றே குறிப்பிடபடும். ஆனால், 5 ரூபாய்க்கு குறைந்து நிலவரியுள்ள பட்டாதாரிகளிடம் இருந்து ஒரே தவணையாக வசூல் செய்யவேண்டும். இதற்குமேற்பட்ட நிலவரியுள்ள பட்டாக்களின் தொகையை, நான்கு சம தவணைகளாக ஜனவரி முதல் ஏப்ரல் வரை பிரதிமாதம் 1 தவணை வீதம் வசூல் செய்யவேண்டும். ஒரு நயாபைசாவுக்கும் குறைவாக பின்னமாக தவணைத்தொகைகளை கடைசி கிஸ்திகளில், முழு பைசாவாக்கி கணக்கிட்டு வசூல் செய்யவேணும்.

உதாரணமாக பட்டாப்படி டிமாண்டு ரூ 36-10 நப என்றுள்ளதை ஒவ்வொரு கிஸ்தி டிமாண்டும் 36-10 – 9-2 1/2 என்று கணக்கிடுவதற்கு பதிலாக முதல் மூன்று கிஸ்தி தவணைகளையும் 9.04 என்று கணக்கிட்டும் கடைசி கிஸ்து 9.04ம் வசூலிக்கவேண்டும்.

டிமாண்டு ரோல் ஒப்புதல் செய்யப்படுவதற்கு முன்பு கிஸ்தியை கணக்கிடும்போது கிராம கர்ணம் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சரியான டிமாண்டுக்கு அதிகமாக எதையும் வசூல் செய்யாமலிருப்பது சாத்தியமாயிருக்கவேண்டும்.

<u>வரிவசூல் - பலவந்த முறை</u>

1070 வருஷத்தில் 14-வது சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் சம்மன் முதலிய கட்டளைகளை இலவசமாய்ச் சேர்ப்பிப்பதும், அந்த சட்டத்தில் கண்டபடி மறியல் செய்வதும், ஜப்தி பண்ணுவதும் கிராம கர்ணத்தின் சரியான அலுவலைச் சேர்ந்தவைகளாகும். ஆகையால் அவர்கள் தங்களுடைய அலுவல்களைச் சரியாய்ச் செய்யும் பொருட்டு ஷை சட்டத்தில் நிபந்தனைகளின் அடியிற்க சங்கிரகத்தையும் அதன்படி இலாகா மூலமாய் பிறப்பிக்கப்பட்ட அறிக்கைகளையும் நன்றாய் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

நிலத்துக்காகச் செலுத்தவேண்டிய அரசு தீர்வையிலே தண்ணீர் பாய்ச்சிய காக விதிக்கப்பட்ட தண்ணீர் தீர்வையும், சர்க்கார் புறம்போக்கு ஆக்ரமணம், தருசு நிலங்களின் பேரில் விதிக்கப்பட்ட தீர்வை, தண்டவரி, வேறே தீர்வைகளும் அடங்கும்.

ஜப்தி செய்தும், விற்பனை பண்ணியும், பாக்கியை வசூல் செய்யத் தாசில்தார்களுக்கும்/டிப்டி தாசில்தார்களுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற

பாக்கிதாரர் பாக்கியைச் செலுத்திவிடத் தயாராயிருக்கிற பட்சத்திலே, அந்தப் பணத்தை அவர் மாத்திரமே வரப்பெற்றுக்கொள்ள வேண்டுமேயொழிய, படிச் சேவகரிடத்தில் செலுத்துவதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது.

23. பாக்கியாகிற தொகை டிமாண்டில் கண்ட உத்தரவுக்களின்படி செலுத்தப்பட்டுவிட்டால், மறியல் செய்யப்பட்ட சொத்தை, வட்டியும் படியும் மறியல் செலவுட்படச் சேரவேண்டிய பாக்கி செல்லாகும்பொருட்டுப் பகிரங்கமாய் விற்பனை செய்வதற்காக அச்சொத்தின் ஜாபிதாவை கர்ணம் உடனடியாக தாசில்தாருக்கு அனுப்பவேண்டும். பாக்கி வசூலாகிற வரையிலாவது சொத்து விற்பனையாகிற வரையிலாவது கிராம மறியல் செய்யப்பட்ட சொத்தை ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கவேண்டும்.

24. ரெஜிஸ்டரான யாதொரு கூட்டுக் கைப்பற்றுதாரர் கைப்பற்று நிலத்தில் தனக்கு யாதொரு பற்றுமில்லையென்று கலெக்டருக்காவது டிவிஷன் உத்தியோகஸ்தருக்காவது தாசில்தாருக்காவது எழுத்து மூலமாய் நோட்டீஸ் கொடுப்பாராகில், ரெஜிஸ்டரான மற்ற கைப்பற்றுதாரர்களுக்குச் சொந்தமாயிருக்கிற அசையும் பொருள்கள் விற்பனை செய்யப்படாமலிருக்கிற வரையிலாவது அந்த நிலமும் விற்பனை செய்யப்படுகிற வரையிலாவது, அவருடைய அசையும் பொருள்கள் ஜப்தி பண்ணக்கூடாது. ரெஜிஸ்டரான மற்ற கைப்பற்றுதாரர்களுடைய அசையும் பொருள்களும் நிலமும் விற்பனையான பிறகு இன்னும் வரவேண்டிய பாக்கி இருக்குமாகில், மேலே கண்டபடி நோட்டீஸ் கொடுத்திருக்கும் ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரருடைய அசையும் பொருள்களை ஜப்தி பண்ணி விற்பனை செய்யக் கூடும்.

25. ஒரு கிராமத்தைக் குறித்த எல்லா டிமாண்ட் நோட்டீசுகளையும் ஒரேவொரு காகிதத்தில் எழுதி அனுப்புவது சட்ட விரோதமாகாது. மறியல், செய்யவேண்டிய அவசியமிருக்கிறதென்று தோன்றும்போது மறியல் செய்கிறவர் சொத்து யார் வசத்திலிருக்கிறதோ அவர் பாக்கிதாரராயிருந்தாலுஞ்சரி அவருடைய ஏஜெண்டாயிருந்தாலும் சரி அவருக்கு (1-ம் நெம்பர்) டிமாண்ட் நோட்டீசின் அசலைக் காட்டி, அந்த பாக்கிதாரரைப்பற்றிய விவரங்கள் சகிதமாக ஒரு பிரத்தியேகமான நமூனாவில் நகலெடுத்துக்கொண்டு, மறியல் செய்யப்பட்ட சொத்தின் ஜாபிதாவை அந்த நகலின் மேலெழுதி அதை அவரிடத்தில் ஒப்புவிக்கவேண்டும். இந்த ஜாபிதா 2-ம் நெம்பர் நமூனாப்படி இருக்கவேண்டும். இவைகளில் எழுதவேண்டியவைகளை கர்ணம் எழுதவேண்டும் (1-ம் நெம்பர்)- அசலிலே அதன்படி அதிகாரம் கொடுக்கப்பெற்ற கர்ணம ஒவ்வொரு பதிவையும் பற்றிய பைசலை ஓரத்தில் குறித்துவைக்கவேண்டும்; எப்படியென்றால்;- "காட்டியதன் மேல் கொடுக்கப்பட்டது, 21-2-1970" இல்லது "தாலூகாவுக்கு 2-ம் நெம்பர்) அனுப்பப்பட்டது, 24.2.1970" அல்லது "ஜப்திக்கு சொத்து எதுவுமில்லை." (1-ம் நெம்பர்) அசல் மறியல் உத்தரவை அதில் குறிக்கப்பட்ட தேதியன்றாவது அதற்கு முன்பாவது தாலூகாவுக்கு அனுப்ப வேண்டும்.

26. யாதொரு பாக்கிதாரருடைய சொத்து மறியல் செய்யப்பட்ட பிறகும் விற்பனைக்காக ஏற்படுத்தப்பட்ட தினத்துக்கு முன்னும் அவர் டிமாண்ட் செய்யப்பட்ட பாக்கித் தொகையைக் கொடுப்பதாகச் சொல்வதல்லாமல், வட்டியையும் படியையும் மறியல் விஷயமாகப் பிடித்த அவசியமான எல்லாச் செலவையுங்கூட செலுத்துகிற விஷயத்திலே, கர்ணம் அந்த தொகையைப் பெற்றுக்கொண்டு, உடனே அந்த சொத்தை விடுதலை செய்யவேண்டும். அவர் சொத்தை ஒப்புவித்ததற்காகப் பாக்கிதாரரிடத்திலிருந்து ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும்.

27. யாதொரு பாக்கிதாரருடைய மாசூலையாவது நிலத்தில் பறிக்கப்படாமலிருக்கிற உற்பத்திகளையாவது ஜப்தி செய்கிற யாதொரு கர்ணம் அவைகள் அறுவடையாவதற்கு அல்லது பறிப்பதற்குத் தகுதியாயிருக்கும்போது அவைகளை விற்பனை செய்விக்கலாம்; அல்லது, தமக்கு இஷ்டமானால் சரியான காலத்திலே அவைகளை அறுவடை செய்வித்து அல்லது பறிப்பித்து விற்பனையாகிற வரையில் தகுந்த இடங்களில் சேர்த்து வைப்பிக்கலாம். பின்னே சொல்லியபடி செய்கிற விஷயத்திலே,- அப்படிப்பட்ட மாசூல் அல்லது உற்பத்திகளை அறுவடை செய்ததற்காகவும் அல்லது பறித்ததற்காகவும் சேர்த்து வைத்ததற்காகவும் பிடித்த செலவைச் சொந்தக்காரர் சொத்தை மீட்டுக்கொள்ளும் போது

செலுத்தவேண்டும்; அல்லது அது விற்பனை செய்யப்படுகிற பட்சத்தில் விற்று முதலிலிருந்து நை.செலவை எடுத்துக்கொள்ளவேண்டும்.

28. கர்ணம் மறியல் செய்யப்பட்ட சொத்துக்களையாவது கால்நடைகளையாவது வேலை செய்விக்கவுங்கூடாது, மறியல் செய்யப்பட்ட சரக்கு அல்லது தட்டுமுட்டு சாமான்களை உபயோகிக்கவுங்கூடாது; கால்நடைகளுக்காவது உயிரோடிருக்கும் ஜந்துக்களுக்காவது அவர் அவசியமான தீனிப்போடவேண்டும், அதற்காகப் பிடித்த செலவைச் சொந்தக்காரர் சொத்தை மீட்டுக்கொள்ளும் போது செலுத்தவேண்டும்; அல்லது அது விற்பனை செய்யப்படுகிற பட்சத்தில் விற்று முதலிலிருந்து அச்செலவை எடுத்துக்கொள்ளவேண்டும்.

29. மறியல் செய்யப்பட்ட சொத்தைச் சரியாய்ப் பந்தோபஸ்து செய்வதற்காக வேண்டிய முன்ஜாக்கிரதையான ஏற்பாடுகளைச் செய்யும் விஷயத்தில் கர்ணம் அசட்டையாயிருந்த காரணத்தினாலாவது அதை அவர் அக்கிரமமாய் வேலை செய்வித்த அல்லது உபயோகித்த காரணத்தினாலாவது, அது திருடிக் கொண்டுபோகப்பட்டாலும் சேதமாய்ப் போனாலும் நஷ்டமானாலும், அப்படிப்பட்ட சேதம் அல்லது நஷ்டம்தொகையானது யாருடைய அஜாக்கிரதையினால் அல்லது செய்கையினால் அப்படிப்பட்ட சேதம் அல்லது நஷ்டம் நேரிட்டதோ அந்தக் கர்ணத்தினிடத்திலிருந்து சுருக்கவகையாகக் கலெக்டரால் வசூல் செய்யப்படத்தக்கதாகும்; அந்தத் தொகை வசூலானதும் நஷ்டமடைந்தவனுக்கு அதைக் கொடுத்துவிடவேண்டும்.

30. மறியல் சொத்து அளவுக்கதிகமாயிருக்கக்கூடாது; அதாவது மறியல் செய்யப்பட்ட சொத்து கூடியவரையில் பாக்கித் தொகைக்கு ஏற்றதாயிருக்க வேண்டும்,

31. சூரியோதயத்துக்கு முன்னும் சூரியாஸ்தமனத்துக்குப் பின்னும் சொத்தை மறியல் செய்யக்கூடாது.

32. பாக்கிதாரராகவாவது பாக்கிதாரருக்காக உத்தரவாதியாகவாவதிராத யாதொரு நபர் மறியல் செய்யப்பட்ட சொத்தில் தமக்குச் சுதந்திரமுண்டென்று தாவா பண்ணியும் பாதகமில்லாமலே கர்ணம் அதை விற்பனை செய்விப்பாராயில் அந்த தாவாதாரர் தகுந்த அதிகாரமுடைய யாதொரு சிவில் கோர்ட்டில் அந்த சுதந்திரத்தை ருஜுப்படுத்துவதன் மேலும், எதற்காகச் சொத்து விற்பனை செய்யப்பட்டதோ அந்தத் தீர்வை பாக்கித்த கர்ணம் தம்முடைய உத்தரவாதத்தை ருஜுப்படுத்த அசக்தராயிருக்கிற பட்சத்திலும், அந்த சொத்தின் முழு மதிப்புத் தொகையையும் அந்தந்த விஷயத்தைப்பற்றிய சந்தர்ப்பங்களுக்கேற்றபடி வட்டியையும் செலவையும் நஷ்டத்தொகையையும் கர்ணத்திடத்திலிருந்து வசூல் செய்யலாம். ஜப்தி செய்யப்பட்ட நிலத்தின் பறிக்கப்பட்ட உற்பத்தியாவது நிலத்திலுள்ள மாசூலாவது பாக்கிதாரருடைய சுவாதீனத்திலிருந்தால், அவைகளுக்காக கொண்டுவரப்படும் தாவாக்கள் முந்திய விற்பனை, தொறவை அல்லது வேறே காரணத்தை ஆதாரமாகக் கொண்டு செய்யப்படுமாயில் அப்படிப்பட்ட தாவாக்களினாலே, அந்த மாசூல் அல்லது உற்பத்தி எந்த நிலத்தில் உற்பத்தியாயிற்றோ அந்த நிலத்துக்காகப் பாக்கியாயிருக்கிற தீர்வையைப்பற்றிய முந்திய தாவாவுக்கு தடையுண்டாக மாட்டாது.

33. பாக்கிதாரருக்குச் சொந்தமாயிருந்து உள்ளே வைக்கப்பட்டிருக்கிற சொத்தை ஜப்தி செய்யும்பொருட்டு யாதொரு லாயம், தொழுவம், களஞ்சியம், கிடங்கு, வீட்டுக்கு வெளியேயுள்ள சிற்றறை அல்லது வேறே கட்டித்தை யாதொரு கர்ணம் பலாத்காரமாய்த் திறக்கலாம்; மேலும், அவர் வெளிக் கதவு திறந்திருக்கும் யாதொரு குடியிருக்கும் வீட்டுக்குள்ளும் பிரவேசிக்கலாம்; அன்றியும் மேலே சொன்ன காரியத்துக்காக அப்படிப்பட்ட குடியிருக்கும் வீட்டிலுள்ள யாதொரு அறையின் கதவை உடைத்துத் திறக்கலாம்; ஆனால், இதில் பின்னால் சொல்லியிருக்கிற படிக்கன்றி மற்றப்படி அம்மாதிரியான குடியிருக்கும் வீட்டுக்குள் கோஷாக்களுக்காகவாவது ஸ்திரீகள் இருப்பதற்காகவாவது பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிற யாதொரு அறையைப்

கர்ணம் உடைத்துத் திறக்கவுங் கூடாது, அதில் பிரவேசிக்கவுங்கூடாது.

34. வெளிக்கதவு மூடியிருக்கிற குடியிருக்கும் வீட்டுக்குள்ளாவது ஸ்திரீகளுக்காகவென்றே பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டுத் தேசாசாரப்படி அந்தரங்கமானவைகளென்று எண்ணப்படுகிற எவ்வித அறைகளுக்குள்ளாவது பாக்கிதாரருடைய சொத்து வைக்கப்பட்டிருக்கிறதென்று நினைக்கக் கர்ணத்திற்கு நியாயமிருக்கிற விஷயத்திலே, அவர் அதிசமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷன் விசாரணை உத்தியோகஸ்தருக்கு அந்த விஷயத்தைத் தெரிவிக்கவேண்டும். அவர் அந்தப்படி தெரிவித்ததன் மேல் அந்த ஸ்டேஷன் விசாரணை உத்தியோகஸ்தர் அவ்விடத்துக்கு ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரை அனுப்பவேண்டும்; கோஷாக்களிருக்கும் இடந்தவிர வீட்டுக்குள்ளிருக்கிற வேறே யாதொரு அறையின் கதவை கர்ணம் எப்படி உடைத்துத் திறக்கலாமோ அப்படியே அந்த குடியிருக்கும் வீட்டின் வெளிக்கதவையும் அவர் அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையில் பலாத்காரமாய்த் திறக்கலாம். மேலும், போலீஸ் உத்தியோகஸ்தருடைய முன்னிலையிலே கர்ணம் - கோஷாக்களுக்கென்று பிரமமான நோட்டீஸ் கொடுத்த பின்பும், (அந்த ஸ்திரீகள் தேசாசாரப்படி வெளியில் பகிரங்கமாய் வரக்கூடாதவர்களான அந்தஸ்துள்ளவர்களாயிருந்தால்) அவர்களைத் தகுந்த விதமாக அப்புறப்படுத்துவதற்கேற்ற முகாந்திரங்களைச் சவதரித்த பின்பும் கோஷா ஸ்திரீகளின் அறைகளில் வைக்கப்பட்டிருக்கிற பாக்கிதாரருடைய சொத்தை மறியல் செய்யும் பொருட்டு அந்த அறைகளுக்குள் பிரவேசிக்கலாம்; ஆனால், அப்படிப்பட்ட சொத்து அகப்படுகிற பட்சத்தில், அதை உடனே அந்த அறைகளிலிருந்து அப்புறப்படுத்திவிடவேண்டும்; அதன் பிறகு அந்த அறைகளை முன்னே அவைகளிலிருந்தவர்களுக்குத் தாராளமாய் விட்டுவிடவேண்டும். (குறிப்பு) வீட்டுக்கதவுகளையும் ஜன்னல்களையும் ஜப்தி செய்யக்கூடாது.

(ஆ) அசையும் பொருளை விற்பனை செய்வது

35. யாதொரு கர்ணம் விற்பனை நோட்டீஸை தாசில்தார்/டிப்டி தாசில்தார் இடத்திலிருந்து வரப்பெற்றுக் கொள்ளும்போது அவர் - மறியல் செய்யப்பட்ட சொத்து இன்ன இடத்தில் இன்ன தினம் இன்ன மணி நேரத்திலே விற்பனை செய்யப்படுமென்று கண்டிருக்கும் நோட்டீஸ் சகிதமாக, விற்பனை செய்யப்போகும் சொத்தின் ஜாபிதாவைப் பாக்கிதாரருடைய வீட்டு வெளிக்கதவிலாவது சொத்து மறியல் செய்யப்பட்டிருக்கக்கூடியவளவிலாவது ஒட்டுவித்து எவைகளின் விஷயமாகப் பாக்கி ஏற்பட்டதோ அந்த நிலங்களிருக்கிற கிராமத்திலும், உத்தேச விற்பனையைக் குறித்து எந்த இடம் அல்லது இடங்களில் அந்த விற்பனையைப் பற்றி தண்டோரா மூலமாகப் பிரசித்தஞ் செய்விக்கவேண்டும். நோட்டீஸ் ஒட்டப்பட்ட தேதி முதல் பதினைந்து தினம் கழிந்த பிறகன்றி மற்றப்படி விற்பனை செய்வது கூடாது.

(அ) கர்ணம் இந்த அதிகாரங்கள் துர்விநியோகப் படுத்தப்பட்டால், அவர்கள் உத்தரவாதிகளாகக் கொள்ளப்படுவார்களென்றும், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமென்றும் நஷ்டமடைந்தவருக்குத் தாராளமாய்ப் பிரதிபலன் கொடுக்கும்படிச் செய்யப்படுவார்களென்றும் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

36. நியமிக்கப்பட்ட காலத்தில் யுக்தமாகத் தோற்றுகிறபடி அந்த சொத்தை மொத்தமாகவாவது பல பாகங்களாகவாவது ஏலம் போட்டு, உயர்ந்த விலைக்குக் கேட்கிறவருக்குக் கொடுத்துவிடவேண்டும். பாக்கித்தொகைக்கு அதிகமாகச் சொத்து விற்பனையாகிற விஷயத்தில், ஏலத்துக்காகப் பிடித்த செலவையும் வட்டியையும் கழித்துக்கொண்ட பிறகு மீதித் தொகையைப் பாக்கிதாரருக்குக் கொடுத்துவிடவேண்டும்.

37. விற்பனைக்காலத்திலாவது, விற்பனை செய்கிற (தாசில்தார் அல்லது ரெவின்யூ இன்ஸ்பெக்டர்) உத்தியோகஸ்தர் உடனே பின்பு ஏற்படுத்துகிற

காலத்திலாவது அந்த சொத்துக்காகத் தொகையை ரொக்கமாய்க் கட்டிவிட வேண்டும், கிரயதாரர் அந்த சொத்துக்காகத் தொகைமுழுவதையும் செலுத்தியாகிற வரையில் அச்சொத்தின் எந்தப் பாகத்தையாகிலும் எடுத்துக் கொண்டு போக அவருக்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாது. கிரயதாரர் கிரயத் தொகையைச் செலுத்தத் தவறுகிற விஷயத்திலே அந்த சொத்து மறுபடியும் ஏலம் போடப்படும்; தொகை செலுத்தத் தவறிய கிரயதாரர் மறுபடியும் ஏலம் போடுவதனால் நேரிடும் யாதொரு நஷ்டத்துக்கும் பிடிக்கும் செலவுக்கும் உள்ளாவார்.

## (இ) நிலத்தை ஜப்தி பண்ணுவதும் விற்பனை செய்வதும்

38. நிலத்தை ஜப்தி செய்யவேண்டியதா யிருக்கும்போது, கர்ணம் தாசில்தாரிடத்திலிருந்து 4-ம் நெம்பர் டிமாண்டு நோட்டிசைப் பெற்றுக்கொண்டு அதைப் பாக்கிதாரருக்குச் சேர்ப்பிக்கவேண்டும். அதைச் சேர்ப்பிக்கவேண்டியதெப்படியென்றால் - பாக்கிதாரர் வழக்கமாய் வசிக்கிற இடத்திலே அவரிடத்திலாவது அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த யாதொரு ஆண்பிள்ளையினிடத்திலாவது அதிகாரம் கொடுக்கப்பெற்ற அவருடைய ஏஜெண்டினிடத்திலாவது ஒரு நகலைச் சேர்ப்பிக்க வேண்டும்; அல்லது அவர் கடைசியாய் வசித்துக்கொண்டிருந்தாரென்று தெரியவரும் ஸ்தானத்திலே எல்லாருக்கும் தெரியும்படியான ஒரு இடத்திலாவது, ஜப்தி செய்யப்போகிற நிலத்தில் எல்லாருக்கும் தெரியும்படியான ஒரு இடத்திலாவது அதன் நகலொன்றை ஒட்டவேண்டும்.

39. ஜப்திபண்ணி விற்பனை செய்யப்போகிற நிலங்களைக் குறித்து இத்துடன் இணைத்துள்ள நிர்ணயிக்கப்பட்ட நமூனாப்படியுள்ள ஒரு ஜாபிதா சகிதமாக, டிமாண்ட் சேர்ப்பித்த விதத்தை அசல் டிமாண்டில் எழுதி அதைக் கர்ணம் தாசில்தாருக்கு திரும்ப அனுப்பிவிடவேண்டும்.

குறிப்பு,-- இந்த ஜாபிதாவைத் தயார் செய்கையிலே அடியிற்கண்ட குறிப்பை கிராம உத்தியோகஸ்தர்கள் கவனிக்க வேண்டும்:-

(1) ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரரால் எவ்வளவு கிரமப்பிசகாவேனும் வேறொருவருக்கு மாற்றப்பட்டவைகளும், யாதொரு பாக்கி சேரவேண்டியதாயிராதவைகளுமான நிலங்களை, விற்பனைக்குக் கொண்டுவரப்படாத மற்ற நிலங்களுக்கு அந்த ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரரால் செலுத்த வேண்டியதாயிருக்கிற தீர்வை பாக்கிக்காக விற்பனை செய்வது யுக்தமல்ல. சேரவேண்டிய பாக்கியானது நிலங்களை மாற்றிக்கொள்ளப்பெற்றவர் தவறிப்போன காரணத்தினால் ஏற்பட்டிருந்தாலன்றி,

.....

## 39-ம் பாராவில் குறிப்பிட்ட இணைப்பு

### நமூனா கா

அ--

கிராமத்தில் தீர்வை பாக்கிக்காக ஜப்தி பண்ணி விற்பனை செய்ய உத்தேசிக்கும் நிலங்களின் ஜாபிதா.

| பட்டா நெம்பர் | பட்டாதாரருடைய பெயர் | இன்ன பசலிக்காக பாக்கி சேர வேண்டியது | பாக்கி விவரம் | பாக்கித் தொகை | ஜப்திபண்ணி விற்பனை செய்ய உத்தேசிக்கும் நிலம் | | | | நிலத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமானம் | உதாரா. (நிலத்தில் எவையேனும் கட்டிடங்களும் கிணறுகளும் மரங்களும் இருந்தால் அவைகள் இத்தனை யென்பதையும் அவற்றின் விவரத்தையும் இவ்விடத்தில் எழுதுக. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நஞ்சை அல்லது புஞ்சை | சர்வே நெம்பரும் எழுத்தும் | விஸ்தீரணம் | தீர்வை | | |
| | | | | | | | | | | |

~~குறிப்பு:- 11-ம் பக்கத்தில் தொடர்ச்சி ....~~

மற்றபடி, ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரருடைய சுவாதீனத்திலுள்ள பற்றில்லா நிலங்களும் சொத்தும் முன்னதாக விற்பனையாகிற வரையிலே, மாற்றிக் கொள்ளப்பெற்றவர்களுடைய சுவாதீனத்திலுள்ள நிலங்களை விற்பனை செய்யக் கூடாது.

(2) எந்த நிலத்தின் விஷயமாக பாக்கி சேரவேண்டியதாயிருக்கிறதோ அந்த நிலத்தின் சொத்து பாத்தியதையைக் குறித்து விவாதம் ஏற்பட்டாலும் சந்தேகமுண்டானாலும், பாக்கிதாரருடைய அசையும் பொருளை மறியல் செய்யாமல் நிலத்தை ஜப்தி பண்ணி அவசியமானால் விற்பனை செய்வதே சரியான முறையாகும்; ஏனென்றால், நிலத்தின் சொந்தக்காரர் யாராகயிருந்த போதிலும் அந்த நிலம் பாக்கி செலுத்தப் பொறுப்புக்குட் பட்டிருப்பதைக் குறித்துச் சந்தேகமில்லை.

(3) சிவில் கோர்ட்டாரால் விற்பனை செய்யப்பட்ட நிலங்களை சொத்துவந்ததைக்குறித்த மாறுதல்களை யோசிக்காமலே, அந்த நிலங்களுக்காகச் சேரவேண்டியிருக்கிற தீர்வை பாக்கிக்காக ஜப்தி பண்ணி விற்பனை செய்யலாம்.

(4) தீர்ப்புக்கு முன்பாகவுஞ்சரி பின்பாகவுஞ்சரி சிவில் கோர்ட்டாரால் நிலம் ஜப்தி செய்யப்பட்ட காரணத்தினாலே, தீர்வை பாக்கிக்காக அந்த நிலத்தை ஜப்தி செய்வதற்கு தடையுண்டாகமாட்டாது. சிவில் கோர்ட்டார் ஜப்தி செய்வதற்கு முன் எப்படியோ அப்படியே அவர்கள் ஜப்தி செய்த பின்பும் தீர்வை பாக்கிக்காக நிலங்களையும் அவைகளில் அறுவடையாகாமலிருக்கும் மகசூலையும் ஜப்தி பண்ணி விற்பனை செய்ய ரெவின்யூ அதிகாரிகளுக்கு அதிகாரமுண்டு; கோர்ட்டார் ஜப்தி பண்ணி விற்பனை செய்பவை நிலத்திலும் மகசூலிலும் தீர்ப்பான கடனாளிக்குள்ள உரிமையும் சுதந்திரமும் பாத்தியதையுமேயாம்; ரெவின்யூ அதிகாரிகளோவென்றால் நிலத்தையும் அதில் அறுவடையாகாமலிருக்கிற மகசூலையும் விற்பனை செய்கிறார்கள்.

(ஆ) எதைப்பற்றி டிமாண்ட் செய்யப்படுகிறதோ அந்த நிலம் முன்னதாக சிவில் கோர்ட்டாரால் ஜப்தி செய்யப்பட்டிருக்குமாகில், தாசில்தார்களுக்கு அந்த விஷயத்தைத் தெரிவிப்பது கிராம கர்ணத்தினுடைய கடமையாகும்..

(5) பாக்கிக்கும் வட்டிக்கும் ஜப்தி-பண்ணி விற்பனை செய்த செலவுக்கும் சரிக்கட்டிப் போவதற்குப் போதுமான அளவுக்கு மேற்பட்டுள்ள நிலத்தின் பாகத்தைக் கூடியவரையில் விற்பனை செய்யாமலிருக்கவேண்டும்.

(அ) பிரத்தியேகமான நம்பரையுடைய ரெஜிஸ்டரான ரெவின்யூ தணையானது பாக்கிதாரருடைய முழு சுவாதீனத்திலிருக்கும்போது அந்தத் தணைக்குக் குறைந்த எந்தப் பாகத்தையும் விற்பனை செய்யக்கூடாதென்பதை விதியாக வைத்துக் கொள்ளவேண்டும்.

(6) நிலத்தை விற்பனை செய்யச் சாதாரணமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற உத்தியோகஸ்தர் தாசில்தார்/டிப்டி தாசில்தார்.

40. பாக்கியாயிருக்கிற தொகை டிமாண்டில் கண்ட ஷரத்துகளின்படி செலுத்தப்படாமலும், அது குறைவின்றி செலுத்தப்படுவதற்காகத் தாசில்தாருக்குத் திருப்தியுண்டாகும்படி ஏற்பாடு செய்யப்படாமலும் இருந்தால் அவர் அடியிற்கண்ட விதமாகப் பாக்கிதாரருடைய நிலத்தை ஜப்தி பண்ணி ஏலம் போட்டு பாக்கியை வசூல் செய்யத் தொடங்க வேண்டும்.

41. நிலத்தில் எல்லாருக்கும் தெரியும்படியான யாதொரு பாகத்திலே ஜப்தி நோட்டீஸை ஒட்டி ஜப்தி பண்ணவேண்டும். நோட்டீஸில் கண்ட தேதிக்குள்ளாக பாக்கியும் வட்டியும் செலவும் செலுத்தப்படாவிட்டால் சட்டப்பிரமாசாரபடி நிலம் விற்பனைக்குக் கொண்டுவரப்படுமென்று நோட்டீஸில் கண்டிருக்கவேண்டும். ஜப்தியை குறித்து நிலத்தில் பகிரங்கமாய்ப் பிரசித்தம் செய்தும், கெஜெட்டில் விளம்பரம் பிரசுரஞ் செய்தும் அறிக்கை பண்ணவேண்டும்.

42. ஜப்தி நோட்டீஸைச் சாத்தியப்படும் போதெல்லாம் நேரில் பாக்கிதாரர்களுக்குச் சேர்ப்பிக்கவேண்டும்; இந்தப்படி செய்வது சாத்தியப்படாவிட்டால், அதைக் கிராமத்தில் தண்டோராபோட்டுப் பிரசித்தஞ் செய்யவேண்டும்;. மேலும், கிராமச்சாவடியிலாவது கிராம தேவதையின் கோயிலிலாவது கிராமத்தில் பொது ஜனங்கள் சேருவதற்காகவுள்ள வேறே யாதொரு இடத்திலாவது ஒரு ஜாபிதாவை மாட்டிவைக்கவேண்டும்.

குறிப்பு:- இன்னும் ஊழியம் செய்து கொண்டிருக்கும் யாதொரு படைவீரருக்கு பிரஸ்தாப நிலம் சொந்தமானதாயிருந்தால், அது அவருக்குத் தனியாக சொந்தமாயிருந்தாலுஞ்சரி கூட்டாக சொந்தமாயிருந்தாலுஞ்சரி, யுத்தத்தில் ஊழியம் செய்ததற்காக அது அவருக்கு ஒப்படை செய்யப்பட்டிருந்தாலுஞ்சரி, அல்லது அது அவருக்குப் பரம்பரை பாத்தியதை மூலமாய்க் கிடைத்திருந்தாலுஞ்சரி அல்லது விற்பனை மூலமாகவோ தானமூலமாகவோ வேறே விதமாகவோ அது அவருக்குக் கிடைத்திருந்தாலுஞ்சரி, ரெவின்யூ அதிகாரிகள் தீர்வை செலுத்தப்படாததற்காக அந்த நிலத்தை விற்பனைக்குக் கொண்டுவருவதற்குமுன், அந்த நிலத்தின் தீர்வையானது கெடுவு கடந்தும் செலுத்தப்படாமலிருக்கிறதென்றும், இரண்டு மாதத்துக்குள் அது செலுத்தப்படாவிட்டால் அந்நிலம் விற்பனைக்குக்

கொண்டு வரப்படுமென்றும் பாக்கிதாருக்கு அவருடைய கமாண்டிங் ஆபீசர் மூலமாகத் தெரிவிக்கவேண்டும். ஊழியம் செய்துகொண்டிருக்கும் யாதொரு படை வீரரின் நிலத்தைத் தீர்வை பாக்கிக்காக விற்பனை செய்வதற்குமுன் கலெக்டருடைய பிரத்தியேகமான அனுமதியைப் பெறவேண்டும்.

43. ஜப்தி செய்யப்பட்டிருக்கிற அல்லது ஜப்தி செய்யப்படப்போகிற நிலத்தில் தமக்கு பாத்தியதையுண்டென்று தாவா செய்கிற யாதொரு நபர் பாக்கியையும் வட்டியையும் பிடித்த செலவையும் செலுத்தி அந்த நிலத்தை மீட்டுக்கொள்ளலாம்; ஜப்திசெய்யப்பட்ட நிலத்துக்காக அவ்வாறு கொடுப்பதாய் காட்டப்படும் தொகையைக் கர்ணம் பெற்றுக்கொண்டு, தொகை செலுத்தினவருக்கு ரசீது கொடுக்க வேண்டும். ஆனால், பாக்கிதாரருடைய எந்த பாக்கிக்காக விற்பனை பண்ணும்படி உத்திரவு செய்யப்பட்டதோ அந்த பாக்கி முழுவதும் செலுத்தப்பட்டாலன்றி மற்றப்படி, ௸ தொகையைப் பெற்றுக்கொள்ளக்கூடாது.

44. விற்பனை நோட்டிஸை வரப்பெற்றுக்கொள்வதன்மேல், கர்ணம் விற்பனை செய்யவேண்டியதாயிருக்கிற நிலத்தில் எல்லாருக்கும் தெரியும்படியான ஒரு பாகத்திலே விற்பனைக்கு குறைந்தது ஒரு மாதத்துக்கு முன்னதாக அதை ஒட்டிவைக்கவேண்டும். அதைச் சாத்தியப்பட்டால் பாக்கிதாரருக்குச் சேர்ப்பிக்க வேண்டும்; சாத்தியப்படாவிட்டால் மேலே 42-வது பாராவில் ஜப்தி நோட்டிஸுகளைப் பிரசித்தம் செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட விதமாய்ப் பிரசித்தம் செய்யவேண்டும்.

45. விற்பனை செய்யவேண்டிய நிலத்திலிருக்கிற கிணறுகளும் மரங்களும் இத்தனையென்பதையும் அவைகளின் விவரத்தையும் விற்பனை நோட்டிஸோடு சேர்க்கப்பட்டிருக்கிற ஷெட்டியூலில் கண்ட உஷரா காலத்திலே எழுதவேண்டும். விற்பனைக் காலத்திலே அந்த நோட்டிஸ் முழுவதையும் பகிரங்கமாய் வாசித்து, அந்தப்படி வாசிக்கப்பட்டதென்று கிராம கர்ணங்கள் அதில் குறிப்பெழுதிக் கையெழுத்து செய்யவேண்டும், நிலம் விற்பனை செய்யப்படுவதற்கு முன் ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துள்ள ஒரு உத்தியோகஸ்தர் அதைப் பார்வையிடவேண்டும்.

46. ஆஜராயிராத ரயத்துகளும் சொத்தின் கொறவை முதலிய பாத்தியதையுள்ளவர்களும் தங்களுடைய மேல் விலாசங்களையும் எந்த சர்வே நெம்பர்களின் தாங்கள் பாத்தியதையுள்ளவர்களாயிருக்கிறார்களோ அந்த சர்வே நம்பர்களையும் வருஷாந்திர கட்டணமாக ஒரு ரூபாய் செலுத்துவதன்மேல், ரிஜிஸ்டர் செய்வித்துக்கொள்ள அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. இந்த சர்வே நம்பர்களில் ஏதாவது பாக்கிக்காக விற்பனை செய்யப்படப் போவதாய்ப் பிரசித்தம் செய்யப்பட்டால், அந்த சங்கதியை ரெஜிஸ்டர் செய்யப்பட்ட விலாசமுடையவர்களுக்குத் தக்க காலத்தில் தெரியப்படுத்த வேண்டும். நோட்டிஸை ஆள் மூலமாய அனுப்பினால், அதைப் பெற்றுக்கொண்டதாக ஒரு ரசீது வாங்கிக்கொள்ளவேண்டும்; தபால் மூலமாய் அனுப்பினால், பெற்றுக் கொண்டதாய் ஒப்புக்கொள்ளும் ரசீது கிடைக்கும்படியாக" அதை ரெஜிஸ்டர் செய்யவேண்டும். ரெஜிஸ்டர் செய்வதற்காகக் கட்டணம் விதித்து வாங்கப் படுகிறபடியால், அந்த நோட்டிஸை அனுப்புவதற்காகத் தபால் கட்டணமாவது வேறே எவ்வித கட்டணமாவது விதித்து வாங்கக்கூடாது.

47. விற்பனைக்காகப் பிரசுரிக்கப்பட்ட நிலங்களை ஏலத்தில் விலை கேட்க மற்றவர்களைப்போலவே பாக்கிதாரர்களுக்கும் சுதந்திரமுண்டு; அரசாங்க ஊழியர்கள் ௸ ஏலங்களில் கலந்துகொள்ளக்கூடாது.

48. தீர்வை பாக்கித் தொகை முழுவதையும், அதற்குச் சேரவேண்டிய வட்டியையும், பாக்கியைக் கேட்பதற்காவது பூமியை ஜப்தி பண்ணுவதற்காவது விற்பனைக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதற்காவது பிடித்த எல்லா செலவுகளையு கொடுப்பதாகச் சொல்லப் பாக்கிதாரருக்காவது அவருக்காகப் பிரவர்த்திக்கிற யாதொரு நபருக்காவது நிலத்தில் பாத்தியதை கொண்டாடுகிற யாதொரு நபருக்காவது அதிகாரமுண்டு; அதன்மேல் விற்பனையை நிறுத்த வேண்டும்; ஆனால், விற்பனைக்காக ஏற்படுத்தப்பட்ட தினத்துக்கு முன் தினத்தில் சூரியாஸ்தமனத்துக்கு முன்னே அந்தப்படி தொகை செலுத்துவதாகச் சொல்ல வேண்டும். விற்பனை செய்யப்படுமென்று அறிக்கையிடப்பட்ட நிலத்தில் நல்ல

என்பதுடன் பாத்தியதை கொண்டாடுகிற சகல நபர்களும் அந்த நிலத்தில் தங்களுக்குள்ள பாத்தியதையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நியாயமான சௌகரியங்களையெல்லாம் அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

49. தீர்வை பாக்கிக்காக விற்பனை செய்யப்படும் அசையாப் பொருளைச் சொந்தமாகவுடைய அல்லது அதில் தனக்குப் பற்று இருக்கிறதென்று சுதந்தரம் கொண்டாடுகிற யாதொரு நபர் விற்பனைத் தேதியிலிருந்து 30 தினத்துக்குள்ளாக எப்போதாகிலும் --

(அ) கிரயப் பணத்தில் நூற்றுக்கு ஐந்து வீதத்துக்குச் சரியான ஒரு தொகையையும்,

(ஆ) எதற்காக அசையாப் பொருள் விற்பனை செய்யப்பட்டதோ அந்தத்தீர்வை பாக்கியின்மேல் ஏற்பட்ட வட்டி சகிதமாகவும்-ஜப்தி, நிர்வாகம், ~~விக்ரயம்~~, விற்பனை ஆகிய இவைகளுக்காகப் பிடித்த-செலவு சகிதமாகவும், தை பாக்கி விஷயமாய்ச் சேரவேண்டிய இதர செலவுகள் சகிதமாகவும் அந்த பாக்கிக்குச் சரியான ஒரு தொகையையும்,

~~அசையாப் பொருள் எந்தத் தாலூகாவில்~~ டிபாசிட் செய்து, விற்பனையை ரத்து செய்யும்படி கலெக்டருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

50. ரெவின்யூ விற்பனையில் நிலங்கள் கிரயத்துக்கு வாங்கப்பட்டபோது விற்பனை விளம்பரம் பிறப்பிக்கப்படும்; அதைக் கிராம கர்ணங்கள் கிராமத்தில் கிரமமாய்ப் பிரசுரிக்கவேண்டும்.

51. பாக்கிதாரர்கள் வேண்டுமென்று தொகை செலுத்தாமலாவது, தொகை செலுத்தாமல் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு மோசமாய் நடந்து கொண்டாவதிருக்கிற எல்லா விஷயங்களையும் பற்றிக் கிராம கர்ணங்கள் தாசில்தார்களுக்கு ரிப்போர்ட் செய்யவேண்டும்.

52. யாதொரு மைனருடைய சொத்தாயிருந்து, பரம்பரை பாத்தியதை மூலமாக கிரமமாய் அவருக்குக் கிடைத்திருக்கும் எந்த நிலத்தையும் அவர் அதை அடைந்ததற்குப் பிறகு சேர்ந்து வந்திருக்கும் தீர்வை பாக்கிக்காக, அவர் மைனராயிருக்கும் காலத்தில் விற்பனை செய்யக்கூடாது.

## 4. பொது

53. பாக்கிதாரர்களுடைய அசையும் பொருளின் மீதும் அசையா பொருளின் மீதும் நடவடிக்கைகள் நடத்தப்பட்ட பிறகுங்கூட பாக்கி வசூலாகாமல் இருக்குமாகில், அதே ஜில்லாவிலுள்ள இதர கிராமங்களிலாவது தாலூகாக்களிலாவது இதர ராஜ்யங்களிலாவது பாக்கிதாரர்களுக்கு ஏதேனும் சொத்து இருக்கிறதாவென்று கிராம கர்ணங்கள் விசாரணை செய்து தெரிந்துகொள்ளவேண்டும். அவர்களுக்கு அப்படிப்பட்ட சொத்து இருப்பதாக விசாரணையிலே தெரிய வருமாகில், பாக்கியை வசூல் செய்வதற்காக அவசியமான ஏற்பாடுகள் செய்யப்படும் பொருட்டுத் தாசில்தாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும்.

54. சம்மன் முதலிய கட்டளைகளைச் சேர்ப்பிப்பதற்காகவும் மறியல் செய்வதற்காகவும் ஜப்தி பண்ணுவதற்காகவும் சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதிகளின் பிரகாரம் தாங்கள் முழுமையும் நடக்கிறார்களாவென்று கிராம உத்தியோகஸ்தர்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். சம்மன் முதலிய சகல கட்டளைகளையும் அவைகளில் காலம் ஏதாவது குறிப்பிட்டிருந்தால் அதற்குள்ளாவது, காலம் குறிப்பிடாவிட்டால் அவைகள் பிறப்பிக்கப்பட்ட பின்பு 20 தினங்களுக்குள்ளாவது சேர்ப்பிக்கவாகிலும் நிறைவேற்றவாகிலும் வேண்டும். அந்தப்படி செய்யத் தவறுகிறபட்சத்திலே, அந்த சம்மன் முதலிய கட்டளைகளைச் சேர்ப்பிக்கவோ நிறைவேற்றவோ தவறிப்போனதற்குள்ள காரணத்தைக்கண்டு அவைகளைத் தாலூகாவுக்கு வாபஸ் செய்யவேண்டும். இந்த விதிகளை அவர்கள் அசட்டை

செய்வார்களாகில், விற்பனை ரத்துசெய்யப்படவேண்டியதாய் இருக்கக்கூடிய தோடுங்கூட, அவர்களும் தண்டனைக்குள்ளாவார்கள். பாக்கிக்காக சொத்தை ஜப்தி பண்ணி விற்பது சம்பந்தமாக மோசமாய் பிரவர்த்திக்கும் கிராம கர்ணங்கள் நஷ்டமடைந்த நபர்களுக்கு மோசம் தெரியவந்தது முதல் மூன்று வருஷத்திற்குள்ளாக எப்போதாவது அந்த நபர்களால் சிவில் கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடரப்படுவதற்கு உள்ளாவார்கள்.

## சிவில் சப்ளைக் குறித்து கர்ணங்களின் பொறுப்பு

சர்க்காருக்கு லெவி கொடுப்பதிலிருந்து தப்பித்துக்கொள்ள சிலர் கீழ்க்காணும் காரணங்களைக் கூறுவதாகத் தெரியவருகிறது:

1. "இவ்வாண்டு என் நிலத்தில் சாகுபடி செய்யவே இல்லை";
2. "சாகுபடி செய்தேன். ஆனால், பாதிதான் விளைந்தது முழு விளைச்சல் இல்லை";
3. "லெவிக்கு நெல் அளந்து விட்டேன். ஆனால், ரசீது தவறி விட்டது";
4. "சாகுபடிக்குத் தகுதியான எனது நிலத்தின் ஒரு பகுதியில் மட்டுமே பயிர் செய்தேன். ஆகவே, மொத்த பரப்பின் அடிப்படையில் லெவி நெல் அளக்க இயலவில்லை";
5. "நெல் வயல்களை நேரில் பார்க்காமலேயே கர்ணம் லெவி பட்டியல் தயாரித்து விட்டார்" என்பன போன்று.

மேலே கண்ட காரண காரியங்களைக் குறித்து கர்ணம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், அதாவது, அடங்கல் விபரங்களை துல்லியமாக சரிபார்த்து கால நிலைக்கு இணங்க குறிப்புகளை வைத்திருக்க வேண்டும். அடிக்கடி பயிர்களை பார்வையிட்டு அடங்கல் குறிப்புகளை சரிசெய்தல் வேண்டும். புன்செய் நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டால் அடங்கலில் "நெல் பயிர்" என்று குறிப்பிடல் வேண்டும். "கரும்பு" என்றால் கரும்பு என்று குறிக்கவேண்டும்.

ஒரே சர்வே நிலத்தில் பல பயிர்கள் செய்யப்பட்டால் ஒவ்வொரு பயிருக்கான விஸ்தீரணத்தையும் அளந்து அடங்கலில் குறிக்கவேண்டும்.

இரண்டாம் போக சாகுபடி விபரங்களும் அடங்கலில் சேர்க்கப்படுதல் அவசியம்.

-ஒப்பம்

(V. கிருஷ்ணமூர்த்தி)
டிப்டி கலெக்டர் (வருவாய்த் துறை)

பெறுநர்:-

எல்லா கர்ணங்களும்.

நகல் எல்லா தாசில்தார்களும்/டிப்டி தாசில்தார்களும்.

நகல் சார் செயலாளர், வருவாய்த் துறை, பாண்டிச்சேரி. (தகவலுக்காக)

நகல் உணவு வழங்கும் துறை இயக்குநர், பாண்டிச்சேரி. (தகவலுக்காக)